| **நிகர ஏட்டு மதிப்பீடு** | **5,662,769 69** | | | | **4,499,853 92** |

# இலங்கை அச்சீட்டு நிறுவகம்
## நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| திசெம்பர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறு | குறிப்பு | 2016 ரூபா ச. | 2015 ரூபா |
|---|---|---|---|
| 2. **அருவுருவச் சொத்துக்கள்** | | | |
| **கணிணி மென்பொருள்** | | | |
| **கிரயம்** | | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் மீதி | | 216,740 00 | 72,240 |
| மேலதிகங்கள் | | 17,825 00 | 144,500 |
| பதிவழித்தல் | | - | - |
| **ஆண்டின் இறுதியிலுள்ளவாறு மீதி** | | **234,565 00** | **216,740** |
| **திரட்டிய சேதவழிப்பு** | | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் மீதி | | 72,240 00 | 72,240 |
| பதிவழித்தல் | | 51,137 50 | - |
| **ஆண்டின் இறுதியிலுள்ளவாறு மீதி** | | **123,377 50** | **72,240** |
| **ஆண்டின் இறுதியிலுள்ளவாறு நிகர மீதி** | | **111,187 50** | **144,500** |
| 3 **வர்த்தக மற்றும் ஏனைய பெறுகைகள்** | | | |
| கடன்பெறுநர்கள் | 3.1 | 5,915,125 00 | 4,202,100 |
| பணியாட்டொகுதி கடன்பெறுநர்கள் | 3.2 | 458,810 13 | 624,124 |
| | | **6,373,935 13** | **4,826,224** |
| 3.1 **கடன்பெற்றோர்** | | | |
| கடன்பெற்றோர் - தலைமை அலுவலகம் | | 8,902,599 50 | 6,676,875 |
| - மாத்தளை கிளை | | 474,450 00 | 362,700 |
| | | 9,377,549 50 | 7,039,575 |
| பலவீனப்படுத்தற் ஏற்பாடு - தலைமை அலுவலகம் | | (3,214,974 50) | (2,656,025) |
| - மாத்தளை கிளை | | (247,450 00) | (181,450) |
| | | **5,915,125 00** | **4,202,100** |
| 3.2 **பணியாட்டொகுதி கடன்பெற்றோர்** | | | |
| கடன் - எம்.டபிள்யு. சனத் | | - | 33,334 |
| எம்.ரீ.டி. விஜேசிறி | | 122,230 00 | 188,890 |
| ஷமல் ஹெட்டிஹராச்சி | | 77,790 09 | 144,450 |
| டபிள்யு.ஏ.எம். லங்காதிலக்க | | 56,000 00 | 104,000 |
| டி.எஸ்.எஸ். பரணகே | | 77,790 00 | 144,450 |
| சமன்த குலதுங்க | | 125,000.04 | - |
| பண்டிகை கொடுப்பனவு - தலைமை அலுவலகம் | | - | 8,000 |
| - மாத்தளை கிளை | | - | 1,000 |
| | | **458,810 13** | **624,124** |

## இலங்கை அச்சீட்டு நிறுவகம்
## நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| திசெம்பர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறு | குறிப்பு | 2016 | 2015 |
|---|---|---|---|
| | | ரூபா ச. | ரூபா |
| 4. **முன்கொடுப்பனவுகள்** | | | |
| புதிய கட்டிடத்திற்கான முற்பணக் கொடுப்பனவு செலவுகள் | | 3,582 10 | - |
| இணையத்தளம் ஏற்புக் கட்டணங்கள் | | 5,957 95 | 5,163 |
| | | **9,540 05** | **5,163** |
| 5. **குறுகிய கால முதலீடுகள்** | | | |
| திறைசேரி உண்டியல்கள் | | 3,767,653 95 | 3,521,647 |
| திறைசேரி உண்டியல்களின்மீது பெறக்கூடிய வட்டி | | 145,998 72 | 97,900 |
| | | **3,913,652 67** | **3,619,548** |
| நிலையான வைப்புக்கள் | | 62,857,007 48 | 56,925,962 |
| நிலையான வைப்புக்களின்மீது பெறக்கூடிய வட்டி | | 3,304,704 92 | 2,378,050 |
| | | **66,161,712 40** | **59,304,012** |
| | | **72,075,365 07** | **62,923,560** |
| 6. **காசு மற்றும் காசு சமப்படுத்தல்கள்** | | | |
| மக்கள் வங்கி-நடைமுறை கணக்கு இல. I | | 2,070,657 51 | 2,148,875 |
| மக்கள் வங்கி-நடைமுறை கணக்கு இல. II | | 993,122 91 | 441,373 |
| கையிலுள்ள காசு | | 5,373 00 | 5,373 |
| | | **3,069,153 42** | **2,595,621** |
| 7. **திரட்டப்பட்ட நிதி** | | | |
| 1 சனவரியன்றுள்ளவாறு மீதி | | 73,986,438 31 | 66,848,482 |
| முற்றடக்க வருமானக் கூற்றிலிருந்து மாற்றப்பட்டவை | | 7,137,956 60 | 7,137,957 |
| **31 திசெம்பர் அன்றுள்ளவாறு மீதி** | | **81,614,880 27** | **66,848,482** |

## இலங்கை அச்சீட்டு நிறுவகம்

## நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| **திசெம்பர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறு** | **குறிப்பு** | **2016** | **2015** |
|---|---|---|---|
| | | ரூபா ச. | ரூபா |
| 8. **ஓய்வூதிய பணிக்கொடைக்கான ஏற்பாடு** | | | |
| சனவரி 01 ஆந் திகதியன்றுள்ளவாறு மீதி | | 1,012,550 25 | 920,610 |
| **ஆண்டிற்கான ஏற்பாடு** | | | |
| தலைமை அலுவலகம் | | 88,330 50 | 83,417 |
| மாத்தளை | | 8,643 00 | 8,523 |
| | | 1,109,523 75 | 1,012,550 |
| ஆண்டுக் காலப்பகுதிக்கான கொடுப்பனவுகள் | | - | - |
| **திசெம்பர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறான மீதி** | | **1,109,523 75** | **1,012,550** |
| 9. **வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்** | | | |
| முற்பணத்தில் பெறப்பட்ட வருமானம் | | 30,700 00 | 90,700 |
| சம்பவித்த செலவுகள் | 9.1 | 1,383,931 07 | 1,068,149 |
| | | 1,414,631 07 | 1,158,849 |
| 9.1 **ஒன்றுதிரட்டப்பட்ட செலவுகள்** | | | |
| அலுவலக உதவியாளரின் படிகள் | | 2,702 60 | 9,750 |
| கணக்கீட்டு கட்டணங்கள் | | 141,585 00 | 68,166 |
| கணக்காய்வு கட்டணங்கள் | | 620,280 00 | 495,280 |
| சம்பளங்கள் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு | | 12,167 38 | 11,990 |
| செயன்முறைக் கட்டணங்கள் - தலைமை அலுவலகம் | | 91,053 00 | 88,575 |
| விரிவுரை கட்டணங்கள் | | 184,630 00 | 145,350 |
| சர்வதேச வலைபின்னல் கட்டணங்கள் | | 1,053 68 | 959 |
| நலன்புரி கட்டணங்கள் | | 11,174 00 | 11,503 |
| நன்கொடை அளித்தல் | | - | 16,008 |
| ஆதார பராமரிப்பு கட்டணங்கள் | | 2,500 00 | 2,500 |
| சபை கூட்டத்திற்கு வருகை தருவதற்கான படி | | 13,000 00 | 13,000 |
| ஒன்றுதிரட்டப்பட்ட நிதியம் | | 2,002 00 | 2,409 |
| தொலைபேசி - தலைமை அலுவலகம் | | 10,372 82 | 9,145 |
| - மாத்தளை | | 5,779 53 | 1,779 |
| தவிசாளரின் படிகள் | | - | 7,500 |
| நிழற்படப் பிரதி பண்ணும் பொறிக்கான வாடகை கட்டணம் | | 20,115 96 | 12,849 |
| கல்வி சபை கூட்டத்திற்காக சமூகமளித்தல் கட்டணம் | | 1,500 00 | 1,500 |
| தகவல் தொழில்நுட்பவியல் ஆதரவு சேவை | | 4,000 00 | 4,000 |
| ஊக்குவிப்பு படி - தலைமை அலுவலகம் | | 202,500 00 | 150,000 |
| - மாத்தளை | | 22,500 00 | 15,000 |
| மொழிபெயர்ப்பு கட்டணங்கள் | | 600 00 | 600 |
| PAYE வரி | | 285 00 | 285 |
| மின்சாரம் - மாத்தளை | | 1,283 10 | - |
| பாடநெறி இணைப்பு கட்டணங்கள் உயர் டிப்ளோமா | | 10,000 00 | - |
| தபாற்செலவு மற்றும் எழுதுகருவிப் பொருட்கள் | | 12,075 00 | - |
| செயன்முறைக்கான பொருட்கள் | | 4,000 00 | - |
| விளம்பரம் | | 5,772 00 | - |
| உயர் டிப்ளோமா எழுதுவினைஞர் பணிச் செலவுகள் | | 1,000 00 | - |
| | | **1,383,931 07** | **1,068,149** |

## இலங்கை அச்சீட்டு நிறுவகம்
## நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக | குறிப்பு | 2016 | 2015 |
|---|---|---|---|
| | | ரூபா ச. | ரூபா |

10. **பாடநெறிக் கட்டணங்கள், பதிவுசெய்தல் கட்டணங்கள் மற்றும பரீட்சைக் கட்டணங்கள் முதலியவற்றிலிருந்தான வருமானம்**

| | 2016 (ரூபா ச.) | 2015 (ரூபா) |
|---|---|---|
| பாடநெறிக் கட்டணங்கள் | 20,897,448 00 | 19,222,273 |
| பதிவு செய்தல் கட்டணங்கள் | 471,250 00 | 338,450 |
| பரீட்சைக் கட்டணங்கள் | 33,000 00 | 8,970 |
| கல்வி கலந்துரையாடல் வருமானம் | - | 432,500 |
| செலவை | **21,401,698 00** | **20,002,193** |

11. **மாத்தளை கிளையிலிருந்து நிகர மிகை/(குறைப்பு)**

| | 2016 (ரூபா ச.) | 2015 (ரூபா) |
|---|---|---|
| *வருமானம்* | | |
| பாடநெறி கட்டணம் | 664,000 00 | 460,000 |
| *செலவுகள்* | | |
| பணியாட்டொகுதி சம்பளங்களும் ஊக்குவிப்பு படிகளும் | 450,252 00 | 376,312 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 22,818 24 | 22,645 |
| ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | 5,704 62 | 5,661 |
| மின்சாரம் | 8,834 88 | 9,562 |
| தேய்மானம் | 1,445 00 | 1,445 |
| தொலைபேசி | 17,829 12 | 10,736 |
| பலவீனப்படுத்தற்கான ஏற்பாடு | 66,000 00 | 16,450 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 8,643 00 | 8,523 |
| | 581,526 86 | 451,335 |
| **செலவிற்கு மேலதிகமான வருமான மிகை** | **82,473 14** | **8,665** |

## இலங்கை அச்சீட்டு நிறுவகம்
## நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக | குறிப்பு | 2016 | 2015 |
|---|---|---|---|
| | | ரூபா ச. | ரூபா |

12. **பாடநெறிக் கட்டணங்கள், பதிவுசெய்தல் கட்டணங்கள் மற்றும் பரீட்சைக் கட்டணங்கள் ஆகியவற்றிள்மீதான நேரடி செலவுகள்**

| | 2016 | 2015 |
|---|---|---|
| பணியாட்டொகுதி சமபளங்கள், ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் மற்றும் படிகள் | 2,188,318 00 | 2,161,001 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 170,370 56 | 174,671 |
| ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | 43,678 27 | 43,668 |
| விரிவுரைக் கட்டணங்கள் மற்றும் ஒன்றுதிரண்ட நிதியத்திற்கான கொடுப்பனவு | 2,467,929 50 | 1,515,167 |
| செயன்முறைக் கட்டணங்கள் மற்றும் ஒன்றுதிரண்ட நிதியத்திற்கான கொடுப்பனவு | 1,268,875 33 | 1,496,759 |
| நன்கொடைகள் மற்றும் ஒன்றுதிரண்ட நிதியத்திற்கான கொடுப்பனவு | 145,796 00 | 170,249 |
| பராமரிப்பு ஆதாரக் கட்டணங்கள் | 30,000 00 | 30,000 |
| தகவல் தொழில்நுட்பவியல் ஆதார சேவை | 48,000 00 | 36,000 |
| கல்வி கலந்துரையாடல் செலவுகள் | - | 216,850 |
| நிழற்படப் பிரதி இயந்திர வாடகை கட்டணம் | 225,620 96 | 192,456 |
| செயன்முறைக்கான கருவி | 49,504 81 | 23,435 |
| எழுதுகருவிப் பொருட்கள் மற்றும் தபால் | 136,692 50 | 138,447 |
| வாடகை, மின்சாரம் மற்றும் நீர் | 849,700 00 | 792,700 |
| வெகுமதி அளிப்பு வைபவ செலவுகள் | 65,000 00 | - |
| பயிற்சி நிகழ்ச்சித்திட்ட செலவுகள் | 361,685 00 | 10,180 |
| பரீட்சை மேற்பார்வை கட்டணங்கள் | 11,700 00 | - |
| பரீட்சை வினாத்தாள் திருத்துதல் | 19,900 00 | - |
| கொழும்பு பல்கலைக் கழகத்திற்கான விரிவுரைக் கட்டணங்கள் | - | 1,900,000 |
| NVQ இற்கான பாடநெறி அங்கீகார கொடுப்பனவு | - | 2,000 |
| | **8,081,770 93** | **8,903,580** |

13. **ஏனைய வருமானங்கள்**

| | 2016 | 2015 |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் சம்பள மேலதிக கொடுப்பனவை அறவிடல் | 9,456 00 | 25,296 |
| இதர வருமானம் | - | 17,550 |
| சொத்துக்கள் விற்பனையின்மீதான இலாபம் | 12,861 61 | 123,412 |
| இதர வருமானம் | **22,317 61** | **166,258** |

**இலங்கை அச்சீட்டு நிறுவகம்**

**நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**

| திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக | குறிப்பு | 2015 | 2014 |
|---|---|---|---|
| | | ரூபா ச. | ரூபா |
| 14. **ஊழியர் கிரயம்** | | | |
| பணியாட்டொகுதி சம்பளங்கள் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் மற்றும் படிகள் | | 3,034,497 51 | 2,427,455 |
| ஊழியர் சேமலாப நிதியம் | | 186,168 00 | 180,876 |
| ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | | 46,542 00 | 45,219 |
| பியோனிற்கான ஊழிய கட்டணங்கள் மற்றும் படி | | 127,249 55 | 111,550 |
| நலன்புரி கட்டணங்கள் | | 115,322 50 | 92,230 |
| பணியாட்டொகுதி பயிற்சி | | 1,200,409 39 | 33,500 |
| ஓய்வூதிய பணிக்கொடைக்கான ஏற்பாடு | | 88,330 50 | 83,417 |
| | | **4,798,518 95** | **2,974,246** |
| 15. **ஏனைய செயற்பாட்டு செலவுகள்** | | | |
| தவிசாளர் படிகள் | | 180,000 00 | 67,500 |
| சபை கூட்டத்திற்கான வருகை படி | | 228,000 00 | 5,000 |
| கல்விச் சபை கூட்டத்திற்கான வருகை படி | | - | 9,000 |
| ISO செலவுகள் | | 243,940 00 | 168,320 |
| பிரயாணம் | | 8,840 00 | 14,220 |
| சந்தைப்படுத்தற் நிறைவேற்றுநர்களுக்கான பிரயாண படி | | 72,000 00 | 72,000 |
| சபை கூட்டச் செலவுகள் | | 18,465 00 | 2,320 |
| திருத்தங்களும் பழுதுபார்த்தலும் | | 259,713 96 | 855,954 |
| தொலைபேசி | | 133,400 93 | 154,014 |
| சர்வதேச வலைபின்னல் சேவை கட்டணங்கள் | | 5,696 76 | 5,449 |
| கணக்கீட்டுச் கட்டணங்கள் | | 249,399 00 | 169,929 |
| கணக்காய்வு கட்டணங்கள் | | 125,000 00 | 125,000 |
| காப்புறுதி | | 4,364 61 | 4,365 |
| விளம்பரம் | | 534,868 01 | 383,373 |
| பாடநெறி ஊக்குவிப்பு அலுவல்கள் | | 12,000 00 | 5,250 |
| பதிவழித்தல்களுக்கான ஏற்பாடு | | 2,139,400 00 | 1,075,575 |
| வங்கிக் கட்டணங்கள் | | 53,783 77 | 3,004 |
| அமைச்சர் வருகைக்கான செலவுகள் | | 5,000 00 | 29,000 |
| கண்காட்சிக்கான செலவுகள் | | 18,200 00 | 34,760 |
| மொழிப்பெயர்ப்பு கட்டணங்கள் | | 41,358 00 | 9,325 |
| இணையத்தளமொன்றை ஆரம்பிப்பதற்கான கட்டணம் | | 6,354 65 | 6,196 |
| இதர செலவுகள் | | 34,891 43 | 8,529 |
| பதிவழிக்கப்பட்ட முற்பணம் | | - | 227,370 |
| E.T.F. மேலதிகக்கட்டணங்கள் | | - | 2,671 |
| | | **4,374,676 12** | **3,438,122** |
| 16. **நிகர நிதி வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | | 5,151,808 96 | 3,854,93 |
| பணியாட்டொகுதி கடனின்மீதான வட்டி வருமானம் | | 24,069 83 | 26,701 |
| | | **5,175,878 79** | **3,881,638** |

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை / குறிப்புகள்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No.
வீடீவை/ஈ/எஸ்எல்ஜஓபீ/01/16/23

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date
2017 செப்தெம்பர் 12 திகதி

தலைவர்,
இலங்கை அச்சக நிறுவகம்

**இலங்கை அச்சக நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை அச்சக நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக்கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1984 இன் 18 ஆம் இலக்க இலங்கை அச்சக நிறுவக சட்டத்தின் 25(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை சிறு மற்றும் மத்திய அளவிலான தொழில்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, இலங்கை அச்சக நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறு மற்றும் மத்திய அளவிலான தொழில்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கி உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 தொடர்புடைய தரப்பினருடன் இருந்த கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை**

1984 இன் 18 ஆம் இலக்க இலங்கை அச்சக நிறுவகத்தின் சட்டத்தின் பிரகாரம் அரச அச்சகர் பதவி முறைப்படி இலங்கை அச்சக நிறுவகத்தின் நிருவாக சபைக்கு நியமனம் பெறுவதுடன் நிருவாக சபையின் அங்கத்தவர்களில் ஒருவரை அதனது தலைவராக நியமனம் செய்வதற்காக உரிய அமைச்சருக்கு அதிகாரம் உள்ளது. எவ்வாறாயினும் அரச அச்சகர் இலங்கை அச்சக நிறுவகத்தின் ஆரம்பம் முதல் அதனது தலைவராக செயற்பட்டுள்ளார்.

அதே போல் முறையான உடன்படிக்கை ஒன்று அல்லது புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று இன்றி மற்றும் கொடுப்பனவுகள் ஏதுமின்றி இலங்கை அச்சக திணைக்கத்தின் வளவில் தாபனத்தை நடத்துவதற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்தடன் அதற்கு தேவையான இடவசதிகள், மின்சாரம் மற்றும் நீர் அரச அச்சக திணைக்களத்தினால் வழங்கப்படுகின்றது. மேலும், கட்டணம் ஏதும் அறவிடப்படாமல் மீளாய்வாண்டின் போது கட்டணம் ரூபா 849,700 தொகைக்கான 12 பாடநெறிகளுக்கான அச்சகத் திணைக்களத்தின் 42 உத்தியோகத்தர்கள் பங்குபற்றச் செய்யப்பட்டிருந்தது. எனினும் மேற்கூறிய தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 சிறு மற்றும் மத்திய அளவு தொழில்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிறு மற்றும் மத்திய அளவு தொழில்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 1 ஆம் அத்தியாயத்தின் 1.1 பிரிவின் பிரகாரம் பண்டங்களை சந்தைப்படுத்துவதற்காக அல்லது சேவைகள் வழங்குவதற்காக நிறுவப்பட்டுள்ள அரச கூட்டுத்தாபனங்களுக்காக இந்த நியமங்களை பயன்படுத்தக் கூடாது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இலங்கை அச்சக நிறுவகம் இந்த நியமத்தை கடைபிடித்து கணக்குகளை தயாரித்திருந்தது.

(ஆ) சிறு மற்றும் மத்திய அளவு தொழில்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 17 ஆம் அத்தியாயத்தின் 19 ஆம் பிரிவின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாமையின் காரணமாக ரூபா 1,604,253 கிரயத்தையுடைய நிலையான சொத்துக்கள் முற்றாக பெறுமானத்தேய்வு செய்திருந்த போதிலும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. அதன் பிரகாரம் ஏற்பட்டிருந்த மதிப்பீட்டு வழுவினை திருத்தி அமைப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 3,462,424 இற்கான அறவிட முடியாக் கடன் ஏற்பாடொன்று நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காட்டப்பட்டிருந்த போதிலும் அறவிட முடியாக் கடன் ஒதுக்கக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

### 2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2013 செப்தெம்பர் 18 திகதி திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரினால் நிறுவகத்திற்கு உரித்தாக்கியிருந்த 0.1012 ஹெக்டயர் (சுமார் 40 பர்சஸ்) காணியின் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

**2.3 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

1984 இன் 08 ஆம் இலக்க இலங்கை அச்சக நிறுவகச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திலும் குறைந்த பட்சம் ஒரு முறையேனும் பணிப்பாளர் சபைக் கூட்டமொன்று நடத்தப்பட வேண்டுமெனினும் 2016 ஆண்டின் போது 08 பணிப்பாளர் சபை கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. சட்டத்தின் பிரகாரம் நியமனம் செய்யப்பட்டிருந்த 9 பணிப்பாளர்களில் மூவர் 2016 ஆண்டின் போது நடத்தப்பட்ட எந்த ஒரு பணிப்பாளர் சபை கூட்டத்திலும் பங்குபற்றியிருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 7,628,442 இற்கான மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 7,137,957 தொகையாகக் காணப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவு ரூபா 490,485 இனால் வளர்ச்சியடைந்திருந்தது. பதவியணியினர் செலவுகள் மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவுகள் ரூபா 2,760,827 இனால் அதிகரித்திருந்த போதிலும் செயற்பாட்டு வருமானம் ரூபா 2,151,182 இனால் உயர்வடைதல் ஆண்டிற்கான மிகை அதிகரிப்பதற்கு முக்கியமான காரணமாகியிருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 வருடங்களினதும் நிதி விளைவுகளை மீளாய்வு செய்யும் போது 2012 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை தளம்பலுடன் மிகை வளர்ச்சியடைந்திருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமானத் தேய்வினை கவனத்திற்கு எடுத்த பின்னர் நிறுவகத்தின் பங்களிப்பு 2012 ஆண்டின் போது ரூபா 11,974,086 தொகையாகக் காணப்பட்டதுடன் தளம்பலுடன் 2016 ஆண்டின் போது ரூபா 14,225,921 தொகை வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

1984 இன் 18 ஆம் இலக்க இலங்கை அச்சக நிறுவகச் சட்டத்தின் படி அச்சுத் துறையில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு பயிற்சி வழங்கள் மற்றும் சான்றிதழ் வழங்குதல் அச்சுத் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி பாடநெறிகளை ஒழுங்கு செய்தல், புதிய பாடவிதானங்கள், தொழிநுட்ப செயல்முறை தொடர்பாக பருவ செய்தித்தாள்கள் அல்லது வேறு பிரசுரங்கள் வெளியிடுதல் மற்றும் அச்சு தொழிலுடன் தொடர்புடைய தொழிற்சார் கண்காட்சிகளில் பங்குபற்றல் மற்றும் வெளிநாட்டு பயிற்களை ஆரம்பித்து வைத்தல் மற்றும் பரிமாற்றல் அடிப்படையொன்றின் மூலம் பரஸ்பர பயிற்சிகளை வழங்கல் மற்றும் பெற்றுக்கொள்ளல் நிறுவகத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் மீளாய்வாண்டின் போது வடிவமைப்பு திட்டமிடல் மற்றும் தொடர்பாடல், தகவல் தொடர்பாடல் மற்றும் தொழிநுட்பம் மற்றும் அச்சிடல் மற்றும் பொதியிடல் ஆகிய 03 துறைகளில் 14 பாடநெறிகளின் கீழ் 73 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 935 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் அனைத்து பாடநெறிகளும் தேசிய அங்கீகார மட்டத்தின் படி நடத்துவது குறிக்கோளாக இருந்த போதிலும், மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் நடத்தப்படும் 08 பாடநெறிகளுக்காக தேசிய பயிற்சி வழங்கள் உடன்பாடுகளை அறிமுகப்படுத்தியிருக்காமை மற்றும் பயிற்சி வழங்கள் உடன்பாடுகளின் பிரகாரம் பாடநெறிகள் நடைபெறாமையால் 02 பாடநெறிகளுக்கு மாத்திரம் தேசிய தொழில் தகைமை மட்ட (NVQ) த்திற்காக அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது. பயிற்சி வழங்கள் உடன்பாடுகளின் பிரகாரம் பயிற்சி வழங்கும் மணித்தியாலங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நேரிட்டமையால் பாடநெறிகளின் கட்டணங்கள் அதிகரித்தமையால் பயிலுனரின் கவர்ச்சி குறைவடையும் என எதிர்பார்ப்புடன் அங்கீகார மட்டம் அறிமுகப்படுத்தியிருந்த பாடநெறிகளையும் அங்கீகார மட்டத்திற்கு ஆக்குவதில் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சேவைக்காக சர்வதேச மட்டத்தில் தொழிற்தகைமைகளை கொண்ட தொழிலாளர் தொகுதியொன்றினை அபிவிருத்தி செய்தல் நிறுவகத்தின் குறிக்கோள்களில் முக்கியமானதொன்றாகும். வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் 2016 இல் வெளியிடப்பட்டிருந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு பற்றிய புள்ளிவிவர அறிக்கையின் படி அச்சுத் துறைகளில் 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாதிருந்த முறையே 361 மற்றும் 261 தொகைக்காக வெளிநாட்டு தொழில்களுக்கு தகைமையுடைய ஆட்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஈ) பயிற்சியை பூர்த்தி செய்யும் கலைஞர்களின் தொழில் வாய்ப்பு நிலைமை தொடர்பாக தொடர் செயல் நடவடிக்கை மேற்கொண்டு பயிற்சி பாடநெறிகளின் உற்பத்தித்திறனை அபிவிருத்தி செய்வதற்காக அது தொடர்பாக மதிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவத் தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை அச்சக நிறுவகத்திற்காக ரூபா 56,725 தொகையொன்று செலவிடப்பட்டு தாபனத்தின் செயற்பாட்டுமுறை மற்றும் நிதிச்செயற்பாட்டு முறை என்பன 2009 ஆண்டின் போது தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக அமைச்சுக்குச் சமர்ப்பித்திருந்த போதிலும் 2017 ஏப்ரல் வரையும் அவ் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. எனினும் இது தொடர்பாக தொடர் செயல் நடவடிக்கை ஏதும் நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன என அவதானிக்கப்படவில்லை.

(ஆ) நிறுவனத்தினால் பயிலுனர்களிடமிருந்து அறவிடப்படும் பாடநெறிக் கட்டணத்தை அதிகரிக்கும் போது அடிப்படையாக கொள்ளும் விடயங்கள் அடங்கிய முறையான நடைமுறையொன்று தயாரித்திருக்கவில்லை.

## 4.3 நிதியத்தை குறைவாக பயன்படுத்தல்

நிறுவனத்தின் செயற்பாட்டு விடயங்களை விசாலமாக்கி குறிக்கோள்களை நெருங்குவதற்காக உழைக்கும் வருமானத்தை செலவிடாமல் நிலையான

வைப்புக்களில் முதலீடு செய்திருந்ததுடன் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முதலீடு செய்திருந்த தொகை ரூபா 70,075,365 தொகை ஆகும்.

## 4.4 பதவியணியினர் நிருவாகம்

நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 13 ஆக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணியினர் 09 ஆகக் காணப்பட்டமையால் 04 நிரந்தர ஆலோசகர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. எவ்வாறாயினும், பாடநெறிகளை நடத்துவதற்காக பகுதிநேர விரிவுரையாளர்கள் மற்றும் ஆலோசகர்கள் 32 பேர் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட ஆலோசகர்கள் இருவரின் சேவையும் பெறப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 கூட்டிணைந்த திட்டம்

2012-2016 காலப்பகுதி அடங்கக் கூடிய விதமாக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டம் மீளாய்வாண்டிற்கு பொருந்தக் கூடிய விதமாக இற்றைவரைப்படுத்தியிருக்கவில்லை. மேலும், மேற்கூறிய கூட்டிணைந்த திட்டத்திலுள்ள புதிய கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்காக சர்வதேச தொழிற்தகைமைகளுடனான மற்றும் பல் இயலுமைகளையுடைய தொழிலாளர் தொகுதி ஒன்றினை அபிவிருத்தி செய்தல், நிறுவகத்திற்காக புதிய அமைப்புத் திட்டமொன்றை அமைத்தல் மற்றும் அதற்காக தேவையான மனித வளத்தை பெற்றுக்கொள்ளல் ஆகிய விடயங்களை நிறைவேற்றியிருக்கவில்லை.

## 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

சட்டத்தின் குறிக்கோள்கள் அடங்கக் கூடிய விதமாக மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

2011 திசெம்பர் 23 ஆம் திகதிய டீஎம்ஏ/06 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவகத்தில் உள்ளகக் கணக்காய்வொன்று செயற்படுத்தியிருக்கவில்லை. அதன் காரணமாக நிறுவகத்தின் விவகாரங்கள் வினைத்திறனுடனும், ஆக்கபூர்வமான விதத்திலும் மற்றும் போதியளவான உள்ளகக்

கட்டுப்பாட்டு முறைமைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்றது என உறுதிப்படுத்துவதற்கான நடைமுறை ஒன்று நிறுவகத்தில் காணப்படவில்லை.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது 10 சதவீதம் முதல் 4.702 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் நிறுவகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | வருமான நிருவாகம் | பாடநெறி கட்டணத்தை திருத்துவதற்காக நடைமுறையொன்று காணப்படாமை. |
| (ஆ) | கடன்பட்டோர் கட்டுப்பாடு | அறவிட முடியாக் கடன் ஒதுக்கம் தொடர்பாக முறையான நடைமுறை ஒன்று காணப்படாமை மற்றும் கடன் அறவீடு செய்யும் நடைமுறை ஒன்று கடைபிடிக்கப்படாமை. |

ஒப்பம் : எச்.எம். காமினீ விஜேசிங்க

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# SLIOP கணக்காய்வுக் கேள்விகளுக்குப் பதிலளித்தது - 2016

## 2.2 நிதிக்கூற்று பற்றி விளக்கமளித்தல்

### 2.2.1 *இணைப்புப் பங்காளருடன் கொடுக்கல்வாங்கல் வெளிப்படுத்தாமை*

இலங்கை அச்சீட்டு நிறுவகம் 1984 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டதுடன், இவ் அச்சீட்டு நிறுவகத்தின் ஆரம்பத் தலைவராக இருந்தவர் 1984 ஆம் ஆண்டில் அதற்கு அரசாங்க அழுத்தகப் பதவியை வகித்த அரசாங்க அழுத்தகரே ஆவார். அவரின் பொதுக் கொள்கையின்மீது அதன் மக்கள் தொடர்பாடல் அமைச்சரின் அங்கீகாரத்தின்கீழ் அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் அச்சீட்டு சூழலிலுள்ள கட்டிடமொன்றில் இலங்கை அச்சீட்டு நிறுவகம் எனும் பெயரில் அரசாங்க அச்சத் திணைக்களத்தின் அனுசரணைகீழ் தாபிக்கப்பட்டுள்ளது. ஆரம்பம்முதல் இன்றுவரை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் ஊழியர்கள் பயிற்றப்படுவதும் எங்கள் அச்சீட்டு நிறுவகத்தினால் ஆகும். நாட்டில் அச்சீட்டு கைத்தொழில் எழுச்சிபெறும் பொருட்டு அச்சீட்டுத் தொழிலில் ஈடுபட்டிருப்போர் மற்றும் இத்துறையில் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் புதியவர்களுக்கும் தேவையான தொழில்நுட்பவியல் அறிவை பெற்றுக்கொடுக்கும் ஒரே நிறுவகம் அரசாங்க அச்சீட்டு நிறுவகமே ஆகும். அரசாங்க அச்சீட்டு திணைக்களத்துடன் ஒன்றிணைந்து அரசாங்க அச்சீட்டு நிறுவகம் இயங்குவதற்கான காரணம் அச்சீட்டு கைத்தொழிலின் வரலாற்றிலிருந்து இன்றைய புதிய தொழில்நுட்பவியல் வரையுள்ள பொறித்தொகுதி அரசாங்க அச்சகத்தில் சொந்தமாக இருக்கின்றமையே ஆகும். அது பற்றிய அறிவு அச்சீட்டு கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கும் தற்போது இத்துறைக்கு இறங்கியுள்ள புதியவர்களுக்கும் பெற்றுக்கொடுத்து நாட்டிற்குள் அச்சீட்டு கைத்தொழிலை முன்னேற்றுவதற்கு அரசாங்க அச்சீட்டு நிறுவகமும் அரசாங்க அச்சுத் திணைக்களமும் ஒன்றிணைந்து அமைச்சின் அங்கீகாரத்துடன் செயற்படுவது இத்துறைக்கு ஆற்றும் ஒரு பாரிய சேவை ஆகும்.

அதனால், அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் சூழலிற்குள் அரசாங்க அச்சீட்டு நிறுவகத்தை நடாத்திச்செல்கின்றமையால் அச்சீட்டு கைத்தொழில் பற்றிய கல்வி அலுவல்களை மிகவும் இலகுவான முறையில் நடாத்திச் செல்ல முடியுமானதாக உள்ளது.

கட்டணங்கள் அறவிடப்படாமல் அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் ஊழியர்களுக்கு பயிற்சி அளித்தல் அரசாங்க அச்சீட்டு நிறுவகத்தினால் ஆரம்பம் முதல் இன்றுவரை நடாத்தப்படுகின்றன. அரசாங்க அச்சீட்டு நிறுவகம் திறைசேரியிலிருந்து பணம் பெற்றாததுடன் பாடநெறிக் கட்டணங்களின் உழைப்பிலிருந்து பெறும் பணத்தைக்கொண்டே நிறுவகத்தின் நிருவாக செலவுகள் உட்பட எல்லா பராமரிப்பு அலுவல்களையும் செய்கின்றது. மிகவும் குறைந்த வரையறை செய்யப்பட்ட பணியாட்டொகுதியினரைக் கொண்டு இந்நிறுவனம் நடாத்தி செல்லப்படுவதுடன் இதுவரை எங்கள் நிறுவகம் இலங்கை நியம நிறுவனத்தினால் விநியோகிக்கப்படுகின்ற ISO சான்றிதழும் பெற்றுள்ளதும் அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் ஊழியர்களை தவிர்த்து ஏனைய மாணவர்களிடமிருந்து சாதாரண கட்டணங்களை அறவிட்டு பாடநெறிகளை நடாத்தி அதிலிருந்து வரும் பணத்தில் நிறுவகத்தின் ஊழியர் குழுவை பராமரிக்கின்றது. இதற்கு ஆதரவாக அரசாங்க அச்சுத் திணைக்களத்தினால் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் இலவசமாக வழங்கப்படுகின்றது. அத்துடன் மின்சாரம் மற்றும் நீர் வசதிகளும் வழங்கப்படுகின்றன.

இதற்கு அமைய அரசாங்க அச்சுத் திணைக்கள ஊழியர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்ற புலமைபரிசில் மற்றும் பாடநெறிகளின் கூட்டுத்தொகையை ஒவ்வொரு வருடத்தினுள் நிதிக்கூற்றுகளில் வாடகை, மின்சார மற்றும் நீர்க்கட்டணங்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. இத்தொகை பாடநெறி வருமான கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது. இச்செயன்முறை இரு பகுதியினரினால் அங்கீகரிக்கப்பட்டு ஒருமனதாக ஏற்கப்பட்டுள்ளது.

### 2.2.2 *கணக்கீட்டு நியமங்கள்*

எங்கள் நிறுவனத்தின் நிதி அறிக்கை தயாரிக்கப்படுவது, வெளியார் கணக்களார் நிறுவனத்தினால் ஆகும். இது தொடர்பாக அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் அறிவுறுத்தலிற்கு அமைய வருங்காலத்தில் தேவைக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.3 *கணக்கீட்டு கொள்கைகள்*

(அ) முழுமையாக சீர்குலைந்துள்ள போதிலும் பயன்பாட்டிலுள்ள செலவு ரூபா 1,604,523.00 ஆக இருந்த சொத்துக்களை மீண்டும் கருத்திற்கொண்டு மீள்கணக்கிட்டு கணக்கில் வெளிக்காட்டுவதற்கு வருங்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இலங்கை அச்சீட்டு நிறுவகம் நிறுவகத்தின் அறவிடமுடியா கடன் பதிவுழித்தற் கொள்கையானது, 2வருடங்களுக்குமேல் உள்ள எல்லா கடன்களையும் அறவிடமுடியா கடன்கள் என கருதி பதிவழிக்கப்பட்டன.

2.2.4 *கணக்கீட்டு குறைபாடுகள்*

இலங்கை அச்சீட்டு நிறுவகத்திற்கு உரித்தான இக்காணி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்ட முடியாததற்கான காரணம் மெகாபொலீஸ் அமைச்சினால் இவ்விடத்தின் சில பகுதிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளது எனும் அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது எனும் கூற்றினாலே ஆகும். தற்போது இக்காணியை மதிப்பீடு செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அது பற்றிய தெளிவான தீர்மானம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் தேவையான நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

4. **செயற்பாட்டு மீளாய்வுகள்**

4.1 *செயற்பாட்டு பலன்*

(அ) அரசாங்க அச்சீட்டு நிறுவகம் ஒவ்வொரு வருடமும் தொழில்சார் கண்காட்சிகளில் பங்கேற்கின்றது, ஒவ்வொரு வருடத்திற்குள்ளும் அச்சீட்டுத் துறையில் ஈடுபட்டுள்ளோர்கள் போன்றே இத்துறையில் புதிதாக உட்பிரவேசிக்கின்ற புதியவர்களுக்கும் மாநாடுகள் நடாத்தப்பட்டுள்ளன. யப்பான் மற்றும் இந்தியாவினால் நடாத்தப்படும் அச்சீட்டு/வரைவியல் நிகழ்ச்சித்திட்ட புலமைப்பரிசில்களுக்காக அச்சீட்டு நிறுவகத்தின் ஊழியர்கள் பங்குபற்றச் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் கைநூல்கள், செய்திகள் மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களின்மூலம் பாடநெறி மற்றும் கல்வி நடவடிக்கைகள் பாரிய அளவில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) அரசாங்க அச்சீட்டு நிறுவகத்தில் 80% ஆன பாடநெறிகள் அச்சீட்டுத் துறையில் உள்ள கோரிக்கைக்கு அமையவே தயாரிக்கப்பட்டுள்ளன. அதற்காக இப்பாடநெறிகளுக்காக இவ் அச்சீட்டுத் துறையில் ஈடுபட்டுள்ள ஒரு சிறு பகுதியினர் மட்டுமே கவனத்தை செலுத்துகின்றனர். NVQ மட்டத்தில் பிரிப்பது பலனுள்ளதாக அமையாது என எங்களைப்போலவே TVEC நிறுவனத்தினதும் நோக்கமாகும். அதற்கு அமைய பாரிய அளவில் கோரிக்கையுள்ள அச்சீட்டு பாடநெறி மற்றும் வரைவியல் பாடநெறி வகுதிகளாக ஆக்கப்பட்டுள்ளன.

(இ) இலங்கை அச்சீட்டு நிறுவகம் அச்சீடு மற்றும் வரைவியல் துறையின் 800-1000 ஆண்டுகளுக்கு இடையில் தொழில்சார் தகைமைகளை பூர்த்திசெய்துள்ள உழைக்கும்அணியினரை தோற்றுவித்தனர். அவர்கள் இந்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். ஆரம்பத்திலிருந்து இன்றுவரை இந்நிறுவனம் ஏறக்குறைய 25000 பேர்களை அச்சீடு மற்றும் வரைவியல் துறையில் தோற்றுவித்துள்ளனர். அவர்கள் தொழில்களில் ஈடுபட்டுள்ளமை பற்றிய தெளிவான அறிக்கை எம்மிடம் இல்லை. தொழில் தேவைப்படும் இளைஞர்இளைஞிகளுக்கு எங்கள் நிறுவகத்தின்மூலம் தொழில்வாய்ப்பு பெற்றுத்தரப்படும்.

அச்சீட்டு நிறுவகத்திற்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் மாணவமாணவிகளில் 40% இற்கும் 50% இற்குமிடையிலான அளவில் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களே ஆகும். அவர்கள் தங்கள் துறைக்கு உரிய பாடநெறிகளை கற்பதற்கே விசேடமாக வருகை தருகின்றனர். இதற்கு மேலதிகமாக பயிற்சியின் இறுதியில் தொழில்நுட்பவலர்கள் தங்கள் கோரிக்கையின்மீது தொழில்புரிகின்றனர். இதுபற்றிய தெளிவான அட்டவணையொன்று பேணப்படுவது மிகவும் கஷ்டமான அலுவல் ஆவதுடன் வருங்காலத்தில் இதற்காக ஒழுங்குமுறையான செயற்பாட்டு நடவடிக்கை திட்டமிடப்பட்டுள்ளது.

(ஈ) பயிற்சியை முடிக்கும் தொழில்நுட்பவலர்களின் தொழில் ஈடுபாட்டுத் தன்மை பற்றிய பின்னரான விபரப் பணிகள் 2017 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

4.2 *முகாமைத்துவ செயற்பாடு*

(அ) ஏப்பிறல் மற்றும் திசெம்பர் விடுமுறை மாதங்களில் பணிப்பாளர் சபையில் சில உறுபபினர்கள் வெளிநாடு களுக்கு செல்வதால் அல்லது நிருவாக சபை கூட்டம் நடைபெறுவதற்கான கூட்டநடப்பெண் இல்லாமை யின்மீது நிருவாக சபை கூட்டம் நடைபெற முடியாதுள்ளது.

(ஆ) இலங்கை அச்சீட்டு நிறுவகத்திற்கான அலுவல்கள் ஒழுங்குமுறைமை மற்றும் நிதி அலுவல்கள் ஒழுங்கு முறைமை ஆகியவற்றை மீண்டும் அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுவருவதுடன் வருங்காலத்தில் அமைச்சினால் இதுபற்றி தீர்மானம் எடுக்கப்படும்.

(இ) இலங்கை அச்சீட்டு நிறுவகத்தின் பாடநெறிகளுக்கான கட்டணங்கள் குறிப்பிட்டளவில் அதிகரிப்பதற்கும் ஒரு சில ஆண்டுகளுக்குள் நிகழ இருக்கின்றது. எங்கள் நிறுவனம் சுய உற்பத்தி நிறுவனம் ஒள்றாகை யால், நிறுவகத்தின் செலவுகளை நடாத்துவதற்கான செலவின் வீதத்தை கருத்திற்கொண்டு சாதாரண அளவில் பாடநெறிகள் கட்டணங்கள் உயர்த்தப்படும். மேலும், சந்தையில் உள்ள ஏனைய போட்டி நிறு வகங்களுடன் ஒப்பிடும்போது, இலங்கை அச்சீட்டு நிறுவகத்தின் பாடநெறிக் கட்டணங்கள் கீழ் மட்ட நிலையிலே உள்ளன. இதனால் ஒழுங்குமுறையான திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படும்.

4.3 *நிதியத்திலிருந்து குறைபாட்டு பயன்பாடுகள்*

தற்போது எங்கள் நிறுவனத்திற்கென உரித்தான கட்டிடமொன்று இல்லையென்பதுடன் அரசாங்க அச்சுத் திணைக்களத்திற்கு சொந்தமான ஒரு கட்டிடத்தில் இந்நிறுவனத்தை நடாத்த வேண்டியுள்ளது. இக்கட்டிடத்திற் குள் வரையறை நிலத்திற்குள் எங்கள் பாடநெறிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் மாணவ/மாணவிகளுக்கு ஆகக்கூடிய சேவையை வழங்குவதற்கு இடம் பற்றாதுள்ளது. அதனால், மாணவ/மாணவிகளுக்கு இதைவிட நவீன தொழில் நுட்பவியலுடன்கூடிய வசதிகளை வழங்குவதே எங்கள் பிரதான நோக்கம் ஆகும். வருங்காலத் தில் இதற்காக முதலீட்டு தொகையை உபயோகிப்பதே எங்கள் நோக்கம் ஆகும்.

4.4 *பணியாட்டொகுதியின் நிருவாகம்*

மிகையான உதவி விரிவுரையாளர் ஒருவர் இல்லாததுடன் இப்பதவி இப்போது நிரப்பப்பட்டுள்ளது. இப்போது வெற்றிடமாகியுள்ள போதனாசிரியர் பதவியின் தேவையின்மீது கருத்திற்கொண்டதன் பின்னர், வருங்காலத்தில் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவர். எங்கள் நிறுவனம் தானியங்கு நிறுவனம் ஆகையால், பதவிகளுக்கு நிரந்தரமாக ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்போது அப்பதவிக்காக தற்போது ஏற்பட்டுள்ள தேவைப்பாடுகள் பற்றி கருத்திற்கொள் ளப்படும். தற்போது வெளியார் விரிவுரையாளர்கள் மற்றும் போதனாசிரியர்கள் அப்பாடநெறிகளுக்கு உரித்தான கோரிக்கைளின்மீதுமே ஆட்சேர்த்துக்களொள்ளப்படுவர். அவ்வெளியார் போதானாசிரியர்களுக்கு நிரந்தரமான சம்ப ளம் வழங்கப்பட மாட்டாது என்பதுடன் அப்பாட நெறிகளுக்கான போதனைக்கு அமைய கட்டணங்கள் வழங்கப் படும். ஏதேனுமொரு பாடநெறி மாதாந்தம் நான்கு நாட்கள் மட்டும் நடைபெறும் வேளைகளில் வெளியார் விரி வுரையாளர் சேவை பெறப்படுவது பொருத்தமானதாவதுடன் போதானாசிரியர் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டால் ஏதேனும் வேளையில் அப்பாடநெறி நடாத்தப்படாவிட்டால் அவர்களுக்கு மாதாந்த சம்பளம் செலுத்த வேண்டி நேரிடும். அதற்கமைய பார்க்கும்போது தேவைக்கு ஏற்ப வெளியார் போதனாசிரியர்களை சேவைக்கு அமர்த்தல் நிறுவகத்திற்கு மிகவும் இலாபகரமானது. இம்முறை நிறுவகத்தை நடத்துவதற்கு மிகவும் உதவிகரமாக இருக் கும்.

## 5. கணக்கீட்டு அலுவல்களும் நன்னிருவாகமும்

### 5.1 *ஒன்றுதிரட்டிய திட்டம்*

இலங்கை அச்சீட்டு நிறுவகத்தின் வருங்காலங்களை அடக்குமாறு புதிய ஒன்றுதிரட்டிய திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கை அச்சீட்டு நிறுவகம் ஆரம்பத்திலிருந்தே சேவையில் ஈடுபடுத்துவதற்கான சர்வதேச தொழில்சார் தகைமைகளையும் இயலுமையையும் உடைய உழைக்கக் கூடிய அணியை தோற்றுவித்துள்ளது. இதுவரையில் ஏறக்குறைய 25000 மாணவமாணவிகளை தோற்றுவித்துள்ளது. அவர்கள் இந்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

### 5.2 *செயற்பாட்டுத் திட்டம்*

நிறுவகத்தின் முதன்மையான அலுவல் பாடநெறிகளை நடாத்துவதே ஆகும். பாடநெறிகள் நடாத்தப்படும் ஒழுங்குமுறை மற்றும் காலத்தைஅடிப்படையாகக்கொண்டே இச்செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இலங்கை அச்சீட்டு நிறுவக சட்டத்தின் நோக்கத்திற்கு அமைய ஊழியர்களுக்கு பயிற்சி பாடநெறிகளுக்கு ஈடுபடுத்தல் ஏனைய பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயற்படுதல் போன்ற அலுவல்கள் இலங்கை அச்சீட்டு நிறுவகத்தின்மூலம் நடைபெறுகின்றன. இக் காரணிகளுக்கான செயற்பாடுகள் இத்திட்டத்துடன் இணைத்து இல்லாததுடன் சட்டத்தின் நோக்கத்தில் அடங்கப்பெற்றுள்ளவாறு செயற்படுவதற்கு இலங்கை அச்சீட்டு நிறுவகம் எப்போதும் நடவடிக்கை எடுத்துள்ளது. இலங்கை அச்சீட்டு நிறுவகத்தின் செயற்பாட்டுத் திட்டம் அமைச்சின் அங்கீகாரத்திற்கு அமையவே தயாரிக்கப்பட்டுள்ளது.

### 5.3 *உள்ளகக் கணக்காய்வு*

இலங்கை அச்சீட்டு நிறுவகத்தில் ஒரு உள்ளகக் கணக்காய்வு பிரிவோ அல்லது கணக்காய்வாளரோ இல்லை. இதைப்பற்றி அமைச்சிற்கு அறிவித்துள்ளதுடன் இதன் காரணமாக இலங்கை அச்சீட்டு நிறுவகம் அமைச்சின் கணக்காய்வுப் பிரிவிற்கு ஆட்படுவதுடன் அமைச்சினால் காலாண்டிற்கு ஒருமுறை நடாத்தப்படும் உள்ளகக் கணக்காய்வு முகாமைத்துவ குழுவிற்கு இலங்கை அச்சீட்டு நிறுவகமும் பங்குகொள்ளும்.

### 5.4 *பாதீடு நிருவாகம்*

இலங்கை அச்சீட்டு நிறுவகம் சுய உற்பத்தி நிறுவகம் ஆகையினால், பாதீடில் குறிப்பிடப்பட்டுள்ள வரவுசெலவு தற்போதைய வரவுசெலவிற்கு இடையில் முரண்பாடுகள் அரிதாக ஏற்படக்கூடியதுடன் அவை தவிர்க்கமுடியாத ஒரு நிலைமையும் ஆகும். இக்குறைபாடுகளை தவிர்ப்பதற்கு வருங்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 6. முறைமையும் நிருவாகமும்

### 6.1 *வருமான நிருவாகம்*

பாடநெறி கட்டணங்கள் திருத்தத்திற்காக வருங்காலத்தில் எங்கள் கணக்கீட்டு நிறுவகத்துடன் இணைந்து ஏதேனும் ஒழுங்குமுறையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 6.2 *கடனுடனான நிருவாகம்*

அறவிடமுடியா கடன் என ஒதுக்கப்படும் கொள்கையாவது 02 வருடங்களுக்கு மேலான கடன்தொகை அறவிடமுடியா கடன் என பதிவழித்தலாகும். பாடநெறிகளுக்காக உடசேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவ/மாணவியர்களில் எவரேனும் ஒருவா பாடநெறிக் கட்டணத்தில் பாதியை செலுத்தி பாடநெறி காலத்திற்குள் விட்டுச்சென்றுள்ள வேளைகளில் எஞ்சிய பாடநெறி கட்டணங்களை அறவிடமுடியாதுள்ளதுடன் அத்தொகை அறவிடமுடியா கடன் என ஒதுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான கொள்கையுடனான தீர்மானம் எடுத்து அதை நிருவாக சபையின் அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது.

## நிறுவகத்தை முன்னேற்றுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

நிறுவகத்தின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கு, கீழ்க்குறிப்பீடு செய்யப்பட்ட தலைப்புக்களில் செயல்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

### 1. சேவை உற்பத்திகளின் விருத்தி

நிறுவகமானது அதனது கல்வி சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்களையும் ஏனைய செயற்பாடுகளையும் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட வகுதிகளுக்குள் தொடர்கின்றது.

#### 1.1 கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள்

**இலங்கை அரசாங்க அச்சக நிறுவகம்**

- அச்சிடல் தொழில்நுட்பம்
- பட வரைவியல் தொழில்நுட்பம்
- பல் ஊடக தொழில்நுட்பம்

வாழ்க்கைக்கு அபிவிருத்தியினை ஏற்படுத்தக்கூடிய வகையில் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. தேவையைப் பொறுத்து 3 வருடங்களுக்கு ஒரு முறை மீளாய்வு செய்யப்படும்.

#### 1.2 கருத்தரங்குகளும் பயிற்சிப் பட்டறைகளும்

நிறுவகமானது, பள்ளிப் படிப்பை முடித்து விலகிய இளம் மாணவர்களுக்காக அவர்களின் வாழ்க்கையை விருத்தி செய்வதற்கு உதவக்கூடிய வகையில், அச்சிடல் மற்றும் டிஜிட்டல் கலை தொழில்நுட்பங்கள் ஆகிய துறைகளில் கருத்தரங்கு வகையினைச் சார்ந்த பயிற்சிப் பட்டறைகளை வழங்குகிறது.

இத்துறைகளில் தொழில் செய்து கொண்டிருப்பவர்கள் தமது அறிவையும் திறனையும் வளர்த்துக் கொள்வதற்காக நிறுவகம் தொழில்நுட்பங்கள் சார்ந்த பயிற்சிப் பட்டறைகளின் கருத்தரங்குகளை வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கேற்ற வகையில் நடாத்துகிறது.

#### 1.3 விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

நிறுவகமானது, வேறுபட்ட அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்பாண்மைகளின் கோரிக்கைக்கு இணங்க, அந்த அமைப்பாண்மைகளின் பணியாற்றும் பதவியணியினருக்கு படவரைவியல் வடிவமைப்பு மற்றும் பல் ஊடக திறன் ஆகிய விடயங்களில் அவர்களது அறிவையும் திறனையும் விருத்தி செய்யும் நிமித்தம் விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்கின்றது.

#### 1.4 அச்சிடல் கைத்தொழிற்துறையினை விருத்தி செய்தல்

இலங்கை அரசாங்க அச்சக நிறுவகத்தின் பௌதிக வளத்தையும் மனித வளத்தையும் கைத்தொழிற்துறைகளில் ஏற்படும் அபிவிருத்திக்கு ஒருங்கிணைவாக விருத்தி செய்வதற்காக, நிறுவகமும் அதனது பதவியணியினரும் கண்காட்சிகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளில் கலந்து கொண்டுள்ளனர்.

## 2. பிரபல்யப்படுத்துகையும் உற்பத்தி அபிவிருத்தியும்

- இலங்கை அரசாங்க அச்சக நிறுவகத்தினால் முன்னெடுக்கப்படும் கற்கை நெறியினை புதினப் பத்திரிகைகள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல் என்பவற்றின் ஊடாகப் பிரசுரித்தல்

- இலங்கை அரசாங்க அச்சக நிறுவகத்தினைச் சார்ந்த கற்கை நெறிகளினை இலங்கை அரசாங்க அச்சக நிறுவகத்தின் சந்தைப்படுத்தல் அலுவலர்களின் ஊடாக அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்பாண்மைகளில் பிரபல்யப்படுத்தல்.

- இலங்கை அரசாங்க அச்சக நிறுவகத்தின் கல்வி சார் நிகழ்ச்சித்திட்டங்களைப் பிரபல்யப்படுத்தும் முகமாக கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளை இலவசமாக பள்ளிக்கூடங்களிலும் நிறுவகத்திலும் நடாத்துதல்.

- பொதுமக்களிடையே இலங்கை அரசாங்க அச்சக நிறுவகத்தின் வர்த்தக நாமத்தை பிரபல்யப்படுத்துவதற்காக நிறுவகம் பற்றிய செய்திகள் அடங்கிய புத்தகங்களைப் பிரசுரித்தலும் தொலைக்காட்சி முன்னளிப்புகளை நடாத்தலும்

- தகவல்கள் மற்றும் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் பிரசுரிப்பதற்கும் ஏதுவாக ஒரு விரிவான வலைத்தளமும் முகநூல் கணக்கும் ஆரம்பித்தல்

- நிறுவகத்தினால் முன்னெடுக்கப்படும் கற்கை நெறிகளுக்கு ISO 9001 : 2008 சான்றிதழினைப் பெற்றுக் கொள்ளல்.

## 3. நிறுவக அபிவிருத்தி

புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்பங்கள் பற்றிய அறிவையும் திறனையும் தனது மாணவர்கட்கு வழங்கும் நோக்குடன் அச்சக நிறுவகமானது ஒரு 4 நிற ஆப்செட் அச்சிடல் இயந்திரத்தை கொள்வனவு செய்ய உத்தேசித்து, அதற்கான நிதியத்தைக் கோரி, ஒரு கருத்திட்ட பிரேரணையைச் சமர்ப்பித்துள்ளது. இது தொடர்பிலான கலந்துரையாடல்கள் அமைச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நிறுவகத்திற்காக ஒரு புதிய கட்டடம் ஒன்றினை நிர்மாணிக்கும் பொருட்டு நிறுவகமானது, 40 பேர்ச்சஸ் விஸ்தீரணம் கொண்டதொரு நிலப்பரப்பை பொரளை எனுமிடத்தில் அரச அச்சக திணைக்களத்தின் ஊடாக கொள்வனவு செய்துள்ளது.

புதிய கட்டடத்தின் நிர்மாணத்தின் மூலம் நிறுவகத்தின் கொள்ளளவுத் திறன் அதிகரிப்பதனால் அது நிறுவகத்தின் பதவியணியினருக்கும் மாணவர்களுக்கும் சிறந்த சேவையினை வழங்குவதற்கு ஏதுவாகும். அது மட்டுமன்றி இந்நிர்மாணிப்பின் ஊடாக இலங்கை அரசாங்க அச்சக நிறுவகத்திற்கு வர்த்தக ரீதியிலாக இருக்கும் நன்மதிப்பானது அதிகரிக்கும். இது தொடர்பில் நிறுவகமானது அரசிடமிருந்து நிதியத்தை எதிர்பார்ப்பதுடன் இக் கருத்திட்டம் தொடர்பில் சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களும் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.